**செய்தி வெளியீடு** **நாள் : 09.07.2025**

**சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் ஆவடி பேருந்து நிலையம் மேம்படுத்துவதற்கான பணியை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு.சா.மு. நாசர் அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (9.7.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் **திரு.சா.மு. நாசர் அவர்கள்** ஆகியோர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ஆவடி பேருந்து நிலையத்தை ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்களால்** 2024-2025 ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரில் **ஆவடி பேருந்து நிலையத்தினை** மேம்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இப்பேருந்து நிலையம் ரூ.36.06 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.90 Acres நிலப்பரப்பில், 64,700 சதுர அடியில் நிர்வாக கட்டிடம், தரைத்தளம் மற்றும் மூன்று மேல் தளங்களுடன் கட்டப்படவுள்ளது.

நிர்வாகக் கட்டிடத்தில் பயணிகள் மற்றும் போக்குவரத்து ஊழியர்கள் வசதிக்காக உணவகம், 9 கடைகள், பேருந்து நிலைய பணியாளர்களுக்கு ஓய்வு எடுக்கும் அறைகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனி கழிப்பறை வசதிகள் மற்றும் குடிநீர் வசதிக்காக தண்ணீர் சுத்தகரிப்பு நிலையம் நிறுவப்படவுள்ளன. இவற்றுடன், 10 நான்கு சக்கர வாகனம் மற்றும் 435 இரண்டு சக்கர வாகன நிறுத்தம், 10 மாநகர பேருந்து நிறுத்தம், 12 ஓய்வுநிலை பேருந்து நிறுத்தும் வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இப்பேருந்து நிலையம் கட்டுவதன் மூலமாக பயணிகள், சென்னை மற்றும் புறநகரின் பல்வேறு இடங்களுக்கு சென்று வர மிகவும் பயனுள்ளதாக அமையும். இப்பேருந்து நிலையம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

இந்நிகழ்ச்சியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., ஆவடி மாநகராட்சி மேயர் திரு.ஜி.உதயகுமார், துணை மேயர் திரு.சூரியகுமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.ராஜேந்திரன், திருமதி.அம்மு, திருமதி.ஜோதிலட்சுமி, தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி , தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate™